# 12 துறவற வாழ்வு



படம் 12.1 - துறவறத்தார்

துறவற வாழ்வு என்பது முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வாகும். இது ஒரு விசேட இறை அழைப்பாகும். துறவறத்தார் தூய ஆவியினால் வழிநடத்தப்பட்டு இயேசுவைப் பின்பற்றவும் அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்யவும் இறையரசையும் வரவிருக்கும் வாழ்வின் மகிமையையும் இவ்வுலக வாழ்வில் வெளிப்படுத்தும் ஓர் அடையாளமாகவும் வாழ்வர்.

துறவற சபைகள்

- துறவற அருட்பணியாளர்கள்
- குருத்துவம் அல்லாத துறவறத்தார்
  - துறவற அருட் சகோதரர்கள்
  - துறவற அருட் சகோதரிகள்

## துறவற அருட்பணியாளர்களின் சபைகள்

அருட்பணியாளர் ஒருவர் ஏதேனும் ஒரு துறவற சபையைச் சார்ந்தவராயின் அவர் துறவற அருட்பணியாளர் ஆவார். பொதுவாக அருட்பணியாளர்கள் குருத்துவம் என்னும் அருளடையாளத்தைப் பெற்றிருப்பதனால் திருப்பலி நிறைவேற்றும் கடமையையும் உரிமையையும் பெறுகிறார்கள். இவர்கள் தமது துறவற சபை பிராந்தியத் தலைமைத்துவ அருட்பணியாளரின் கீழ் தமது துறவற சபைச் சட்டங்களைப் பின்பற்றி வாழ்வதோடு விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவிப்பதற்கு முயற்சிப்பர்.

**துறவற அருட்பணியாளர்கள் சபைகள் சில :-**

- அமலமரித் தியாகிகள் சபை
- இயேசு சபை
- ஆசீர்வாதப்பர் சபை
- நற்கருணைநாதர் சபை
- பிரான்சிஸ்கன் மூன்றாம் நிலைச் சபை
- கிளரேசியன் சபை

## குருத்துவம் அல்லாத துறவற சபைகள்

இவர்கள் துறவற சகோதரர்கள், துறவற சகோதரிகள் என இரு வகைப் படுவர். இவர்கள் நற்கருணையைப் பகிர்ந்தளிக்கும் பணியை நிறைவேற் றலாம்.

**துறவற அருட்சகோதரர்களின் சபைகள் சில :-**

- மாறிஸ்ட் சகோதரர்கள்
- பிரான்சிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர்கள்
- டிலாசால் சகோதரர்கள்
- அன்பின் சகோதரர்கள்

**அருட் சகோதரிகளின் சபைகள் சில :-**

- திருக்குடும்பக் கன்னியர் சபை
- அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

- நல்லாயன் கன்னியர் சபை
- தூய தூதர்கள் கன்னியர் சபை
- இரட்சகர் கன்னியர் சபை
- சிலுவையின் கன்னியர் சபை
- டொமினிக்கன் கன்னியர் சபை

துறவற சபைகளைச் சேர்ந்த துறவறத்தார் யாவரும் தம் வாழ்வை இறைவனுக்காக அர்ப்பணிக்கின்றனர். அவர்கள்,



1. ஏழ்மை
2. கீழ்ப்படிவு
3. மணத்துறப்பு

ஆகிய மூன்று வார்த்தைப்பாடுகளை அளிக்கின்றனர். முதல் வார்த்தைப் பாடு அளித்து சில வருடங்களின் பின்னர் இறுதி வார்த்தைப் பாட்டை அளிக்கின்றனர். இவ்வுலக செல்வங்களைத் துறந்து இறையாட்சியைக் கட்டியெழுப்புவதே துறவறத்தாரின் முக்கிய பணியாகும்.

துறவறத்தார் அனைவருமே விண்ணரசை இவ்வுலகில் கட்டியெழுப்பும் பணியில் பங்காற்றுகின்றனர். அவர்கள் கல்வி, சமூகப்பணி போன்ற துறைகளில் பணியாற்றுகின்றனர். அவ்வாறே பங்குகளிலும் பணி யாற்றுகின்றனர். துறவற வாழ்வில் இணைய விரும்புவோர் அதற்கான ஆழமான பயிற்சிகளைப் பெற வேண்டும். இவர்கள் தமது இவ்வுலக - வாழ்வின் ஆசைகளைத் துறந்து இறையாட்சியைப் பறைசாற்றும் பணியில் பங்கேற்கின்றனர். தமது வாழ்க்கை மாதிரிகையின் மூலம் அவர்கள் இறையாட்சியைப் பற்றிப் போதிக்கின்றனர்.

ஒவ்வொரு துறவற சபையும் அதன் நிறுவுனரின் நோக்கத்திற்கேற்ப பணியாற்றுகின்றன. அந்தப் பணியை நிறைவேற்றுவதன் வழியாக கிறிஸ்துவின் மறைபரப்புப் பணியில் அவர்கள் பங்கு கொள்கின்றனர்.

| துறவற சபை | தூதுப் பணிகள் |
|---|---|
| • அமலமரித் தியாகிகள் சபை  | ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பு, தியானம், ஞான ஒடுக்கம், வழி நடத்துதல், பங்குப் பணி, ஆன்மீக ஆலோசனை, கல்விப் பணி, நோயாளர் பணி. |
| • ஆசீர்வாதப்பர் சபை  | செபம், சகோதரத்துவம், கல்விப் பணி, மேய்ப்புப் பணி வழியாக இறைவனை மகிமைப்படுத்தல். |
| • மாறிஸ்ட் சகோதரர்கள்  | கல்விப் பணி, இளையோருக்கு சுயதொழில் கல்விப் பயிற்சி, கிறிஸ் துவைப் பறைசாற்றுதல். |
| • டிலாசால் சகோதரர்கள்  | கல்விப் பணி, இளைஞர்களுக்கான பல்வேறு பணிகள், தொழிற் பயிற்சி |
| • திருக்குடும்பக் கன்னியர் சபை  | கல்வி, சமூகப் பணி, மறைத்தூதுப் பணி, மறைக்கல்விப் பணி |
| • அப்போஸ்தலிக்க கார்மேல் சபை  | கல்வி, சமூகப் பணி, முதியோர் பராமரிப்பு, பங்குப் பணி. |

| | |
|---|---|
| • நல்லாயன் கன்னியர் சபை  | கல்விப் பணி, இளம் பெண்களுக்கான பல்வித பணிகள், அவர்களின் வாழ்வைக் கட்டியெழுப்ப உதவுதல், பங்குப் பணி, கைவிடப்பட்டோரைப் பராமரித்தல். |
| • தூய தூதர்கள் கன்னியர் சபை  | கல்வி, மறைக்கல்வி, சமூகப் பணி, ஆதரவற்ற, சிறுவர்விடுதிகளைநடத்துதல், சிறுவர் மற்றும் இளைஞர்களுக்காற்றும் பணிகள். |
| • இரட்சகர் கன்னியர் சபை  | கல்வி, மறைக் கல்வி, அனாதை இல்லம், இளம் பெண்களுக்கான பணி, பங்குப் பணி. |
| • திருச்சிலுவைக் கன்னியர் சபை  | மறை பணி, சமூகப் பணி, பங்குப் பணி, சுகாதார சேவை, தோட்டத் தொழிலாளராக பணியாற்றல். |
| • டொமினிக்கன் கன்னியர் சபை (மால்டா)  | மறைபணி, சமூகப் பணி, முன்பள்ளி, பங்குப் பணி, கல்விப் பணி |

இவ்வாறு, பொதுநிலையினருக்காகப் பணியாற்றும் துறவறத்தாருக்கு உதவி செய்ய வேண்டியது பொது நிலையினரின் கடமையாகும், பொது நிலையினர், கீழ்க்கண்ட விதத்தில் துறவறத்தாரின் பணிகளின்போது அவர்களுக்குத் துணை புரியலாம்.

- அவர்களுடன் இணைந்து இரக்கப் பணி ஆற்றுதல்.
- அவர்களுக்காகச் செபித்தல்.
- அவர்களுக்கு மதிப்பளித்தல்.
- இறையாட்சியைப் பரப்பும் பணிகளில் அவர்களுடன் பணியாற்றுதல்.
- இறை அழைத்தலை ஊக்குவித்தல், செபித்தல்.

சில வேளைகளில் நீங்களும் துறவற வாழ்வுக்கான அழைப்பினைப் பெறலாம். இவ்வாறான அழைத்தலைப் பெற நீங்களும் செபியுங்கள்.

**செயற்பாடு**

1. கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கி 100 சொற்கள் அடங்கிய ஆக்கம் ஒன்று எழுதுக.
    - துறவற வாழ்க்கை
    - துறவற வாழ்வு ஓர் இறை அழைப்பு
    - துறவற வாழ்வின் மேன்மை
2. துறவறத்தாரின் பணிகளிலே துணைபுரியும் நான்கு முறைகளை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

S¸zxÁ, xÓÁÓ Áõ Ì ÂØS CøÓ
AøÇ¨ø£÷Á s iaö\¤² [PÒ.